# False Statement of Al-Muhannad.

*Compiled by:-Moulana Moulvi As-Shaikh Shaik Abdul Quadir Sufi Hazrath Kahiri Radiallahu Anhu.*

## அல்முஹன்னதின் அண்டப் புளுகு.

### பதிப்புரை

எல்லாம் வல்ல அல்லாஹ் தஆலாவின் திருப்பெயரால் துவக்கம். கருணையும், ஈடேற்றமும் காருண்ய காவலர், ஈருலக இரட்சகர், பின் வரும் காரியங்களை முன்னமையே அறிவித்த நல்லவர், முஹம்மது நபி அவர்கள் மீதும் அவர்களது வழித்தோன்றல்கள், அன்பர்கள் அனைவர்கள் மீதும் உண்டாவதாக !

புரட்டர்களும், பொய்யர்களும், வம்பர்களும் பிற்காலத்தில் தோன்றி மக்களை குழப்புவார்கள் என்ற பொய்யாமொழிக்கு ஏற்ப உலா வந்த இல்யாஸ் (அல்ல இப்லீஸ்) தப்(பு)லீக் ஜமாஅத்தினர்களின் மே(ல்)தாவிகள் தங்களது நூற்களில் உளறிக் கொட்டியிருக்கும் வாசகங்களை கோடிட்டுக்காட்டி, இதனால் இவர்கள் “காபிர்கள்” என்று பத்வாவை தொகுத்து, “அல்மு∴த மதுல் முன்கத்-நம்பகரமான பொறுக்குமணிகள்” என்று பெயர் கொடுத்து, புனிதமான மக்கா, மதீனா சங்கைமிகு உலாமாப் பெருந்தகைகளிடமும் இதை காட்டி நற்சாட்சி பத்திரங்கள் வாங்கி அப்படியே கூட்டாமலும், குறைக்காமலும் அந்த பத்வாவில் இணைத்து “ஹுஸாமுல் ஹரமைன் அலாமன்ஹரில் குப்ரிவல்மைன் - குப்று பொய்யின் கழுத்தின் மீது இரு ஹரம் ஷரீபின் (மக்கா, மதீனாவின்) வாள்” என்று பெயர் வைத்த சங்கைமிகு அல்லாமா, முப்தி, பரேலி அஹ்மது ரிழாகான் அ∴ளா ஹழ்ரத்கத்தஸல்லாஹு ஸிர்ரஹு ல் அஸீஸ் அவர்கள் 1324-ம் ஆண்டில்

வெளியிட்டார்கள். இப்பெயர் அப்ஜத் கணக்கு பிரகாரம் அது வெளியான 1324ம் ஆண்டை குறிக்கிறது.

இந்த தீர்ப்பு மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்ச்சி, தாக்கத்தை உண்டாக்கியபோது புரட்டு மன்னர்களுக்கு மன உளைச்சலையும், தலைவலியையும் ஏற்படுத்தியது.

இதை நிவர்த்திக்க, மக்களை திசை திருப்ப அண்டப் புளுகுகளை அவிழ்த்துவிட்டு கலீல் அஹ்மது அம்பேட்டி என்பார் "அல்முஹன்னத் அலல் முபன்னத்- கிழவன் (பரேலி அஃலா ஹழ்ரத்) இந்திய நாட்டு வாள்" என்றதொரு நூல் வெளியிட்டார்.

இதற்கு பல எதிர்ப்பு நூற்கள் வெளியாயின, இவைகளில் முக்கியமானது:-

"ராத்துல் முஹன்னத் அலா நஹீகீயில் அம்பேட்டியில் முபன்னத்- (கழுதை) கத்தும் அம்பேட்டி கிழவன் மீது இந்திய நாட்டு வாளை திருப்பி விடுதல் என்ற நூலாகும்.

கலீல் அஹ்மது அம்பேட்டி வெளியிட்ட அல்முஹன்னதுக்கும் உண்மைக்கும் எவ்வளவு தூரம் என்பதையும் அது கூறும் விவரங்கள் எவ்வளவுக்கு நியாயமற்றது என்பதையும் அக்கு வேறு ஆணி வேறாக பிரித்தெடுத்து, தெளிவுபடுத்தி "அல்முஹன்னதின் அண்டப் புளுகு" என்ற பெயரில் 1397 ஜமாதுல் ஊலா 1977 மே ஆண்டில்,

எங்கள் குருநாதர் அஷ்ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி சித்தீகிகாஹிரி கத்தஸல்லாஹு ஸிர்றஹு ல் அஸீஸ் அவர்கள் ஒரு வெளியீடு வெளியிட்டார்கள்.

ஹுஸாமுல் ஹரமைனியின் பிரஸ்தாபத்தை கேள்விப்படும் தப்(பு)லீக் ஜமா அத்தின் இக்கால அபிமானிகளுக்கு எரிச்சலும் சொரிச்சலும் ஏற்பட்டு பரிகாரம் தேடி முக்கிய புள்ளிகளிடம் சென்ற போது நம்மே(ல்)தாவி கலீல் அஹ்மது அந்த ஹுஸாமுல் ஹரமைனிக்கு எதிர் பத்வா அல்முஹன்னது அலல் முபன்னது என்ற பெயரில் வெளியாக்கியுள்ளார்" என்று ஆறுதல் கூறி சமாளிக்கப்படுவதை

பரவலாக அறிந்ததும், நம் ஷெய்குனா ஸூபி ஹழ்ரத் அவர்கள் வெளியாக்கிய அல்முஹன்னதின் அண்டப் புளுகு" என்ற நூலை இரண்டாம் பதிப்பு பதிப்பித்து வெளியிடுவது இக்காலக் கட்டத்தில் அவசியம் என தெரியலாயிற்று.

இதோ இரண்டாம் பதிப்பு உங்களது திருக்கரத்தில் தவழ்கின்றது. அல்ஹம்துலில்லாஹ், படித்து தெளிவு பெறுங்கள். தெளிவுபடுத்துங்கள். பொய்யர்களை வெளிக்கொணருங்கள். பொய்யர்கள், புரட்டர்கள், வழிகேடர்களை விட்டும் நம்மை காப்பாற்றி, மெய்யன்பர்கள் வழியில் நடந்து முக்திபெற எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லுதவி செய்வானாக! ஆமீன்.

முதற்பதிப்பு:
ஜமாதுல் ஊலா 1397
மே 1977

இரண்டாம் பதிப்பு:
புனித ரமழான் 1415
பிப்ரவரி 1995

இவண்
**ஹிஸ்புல்லா ஸபை, ஸூபி மன்ஸில்**
காயல்பட்டணம்.

## முன்னுரை

சகோதரர்களே ! முஸ்லிம்கள் பேரில் உள்ளன்பும், கருணையுமுள்ள கருணை வள்ளல் எம்பிரான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், ஏழை அடிமைகளான நம்மீது எத்தகைய பேருபகாரம் செய்திருக்கிறார்கள்.

"பிற்காலத்தில் பொய்யர்களும், புரட்டர்களும் தோன்றுவார்கள். நீங்களும் உங்கள் மூதாதையர்களும் கேட்டிராத (பொய்ச்) சமாச்சாரங்களை எல்லாம் உங்களிடம் கொண்டுவருவார்கள். நீங்கள் அவர்களை கிட்டவும் வரவிடாதீர்கள். நீங்களும் அவர்கள் அருகில் கூட போகாதீர்கள். (அப்படியானால் தான்) அவர்கள் உங்களை

வழிகெடுக்கமாட்டார்கள். குழப்பத்தில் ஆக்கமாட்டர்கள்” என்று இன்றைக்குப் பதிமூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வழிகெட்ட கூட்டத்தார்களை பற்றி அவர்களுடைய இலட்சணங்களையும் அடையாளங்களையும் விளக்கிக்காட்டி நமக்கு எச்சரிக்கை செய்து உபதேசம் செய்திருக்கிறார்கள். அந்தத் தீர்க்கதரிசி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அறிவித்தது போன்றே 13 நூற்றாண்டுகளுக்குப் பிறகு பொய்யர்களும், புரட்டர்களும் வெளிப்பட்டிருக்கிறார்கள்.

அந்தப் பொய்யர்கள் பொய் கூற்றுக்கு ஒரு எடுத்துக்காட்டாகத்தான் “தேவ்பந்தியா” க்களின் குரு கலீல் அஹ்மது அம்பேட்டி என்பவரால் எழுதப்பட்ட “**அல்முஹன்னது அலல்முபன்னது**” என்ற நூல் காணப்படுகிறது.

அந்நூலின் உண்மை நிலையைத்தான் இப்போது விளக்கப்படுகிறது. இந்நூலில் காணப்படுகின்ற அனைத்து விஷயங்களும் அபாண்டமாகவும், புளுகுகளாகவுமே காணப்படுவதால் இதற்கு “**அல்முஹன்னதின் அண்டப் புளுகு**” என தலைப்பிடப்பட்டிருக்கிறது.

ஜமாதுல் ஊலா 1397 இவண்
மே 1977 **காதிமுல்கௌம் ஷெய்கு அப்தல் காதிர்.**

## அல்முஹன்னதின் அண்டப் புளுகு.

1 முஹம்மது காஸிம் நானூத்தவி என்பவர் தமது “தஹ்தீருன்னாஸ்” என்னும் நூல் 3- ம் பக்கத்தில் சாமான்ய அறிவில்லாத மக்களின்

அபிப்பிராயத்தில் ரஸூ லுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் காத்த முன்னபிய்யீன் என்பதற்குப் பொருள்:-

அவர்களின் காலம் முந்திய நபிமார்களின் காலத்திற்கு பிந்தியதாகும். தாங்கள் எல்லோர்களிலும் கடைசியான நபி என்பதுவாகும். ஆனால் காலத்தால் முந்துவதாலோ, பிந்துவதாலோ சுயமாக தன்னிலே விஷேஷமில்லை என்பது புத்திமான்களுக்கு விளங்கும் என்றும்,

13 ம் பக்கத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய காலத்தில் எங்கேயாவது வேறு ஒரு நபி இருந்தார்களென்று வைத்துக் கொண்டாலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் காத்த முன்னபிய்யீனாக இருப்பது அப்படியே தரிபாடாக இருக்கும் என்றும்,

25 – ம் பக்கத்தில் மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய காலத்திற்குப் பிறகும் யாரோ ஒரு நபி உண்டானார்கள் என்று வைத்துக் கொண்டாலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் காத்த முன்னபிய்யீன் என்பதில் யாதொரு வித்தியாசமும் உண்டாகாது'' என்றும் எழுதியுள்ளார்.

இவ்வாசகங்கள் ஒவ்வொன்றிலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "இறுதி நபி'' என்று சொல்வது மடையர்கள் சொல்லும் பொருள் என்றும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் காலத்திலோ அல்லது அவர்களுக்குப் பிறகோ வேறு ஒரு நபி வரலாம், தோன்றுவது ஆகும் என்றும் சொல்கிறார்.

இது நாயகம் அவர்கள் "இறுதி நபி அவர்களுக்குப் பிறகு நபியில்லை'' என்று உம்மத்தே முஹம்மதியாக்கள் எல்லோர்களாலும் ஏகோபித்து ஒப்பக் கொள்ளப்பட்டதற்கு மாற்றமாகும். இதன் காரணமாகவே தான் நானூத்தவியை மக்கா மதீனா உலமாக்கள் நானூத்தவி காபிர் என்று பத்வா கொடுத்தார்கள்.

2 ரஷீது அஹ்மது கொங்கோஹி தனது இமாம், இந்தியா வஹ்ஹாபியக் குழுவின் தலைவர் இஸ்மாயீல் திஹ்லவியைப் பின்பற்றி

முதலாவதாக அல்லாஹ் பொய் சொல்லுவது இடம்பாடுதான், சாத்தியம் தான்'' என்று சொன்னார். பின்னர் அவர் கையொப்பத்தோடு ஒருபத்வா (இது பம்பாயில் அச்சிடப்பட்டது. அதைப்பல போட்டோ காப்பிகள் எடுக்கப்பட்டது. மதீனா ஷரிபிலும் ஒரு காப்பி இருக்கிறது) அதில் அவர் சொல்கிறார்:-

'அல்லாஹ் பொய் சொன்னதாக நம்பி அல்லாஹ் பொய் சொல்லிவிட்டான் இந்த குறைபாடு அல்லாஹ்விடத்தில் ஏற்பட்டுவிட்டது என்று ஒருவன், சொன்னால் அவனை காபிர் வழி கெட்டவன் என்று சொல்வது இருக்கட்டும். அவனை பாஸிகு (கெட்டவன்) என்று கூட சொல்லாதீர்கள். ஏனென்றால் அநேக உலமாக்கள் அப்படி அவன் சொன்னது போல் சொல்லியிருக்கிறார்கள்''

இதன் காரணமாக இவரையும் மக்கா மதீனா உலமாக்கள் காபிர் என்று பத்வா கொடுத்தார்கள்.

3 கலீல் அஹ்மது அம்பேட்டி தனது பறாஹீனகாதிஆ எனும் நூல் 51-ம் பக்கத்தில், முடிவாக அவசியம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்:- ஷைத்தான்,மலக்குல் மவுத்து இவர்களின் நிலைகளைப் பார்த்துவிட்டு பூமி முழுவதையும் அறியக்கூடிய அறிவு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கும் இருப்பதாக தரிபடுத்துவதாகிறது ஷிர்க் (இணைவைத்தல்) ஆகாமல் ஈமானின் வேறு எந்த பாகத்தை சேரும்?

ஷைத்தானுக்கும், மலக்குல் மவுத்துக்கும் இந்த விசால அறிவு இருப்பதாக குர்அன், ஹதீதுகளின் ஆதாரத்தைக் கொண்டு தரிப்பட்டிருக்கிறது. (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு விசால அறிவு உண்டு என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? என்று சொல்வதால்) எல்லா ஆதாரங்களையும் மறுத்து ஒரு ஷிர்க்கை தரிபடுத்துகிறான்'' என்று எழுதியுள்ளார்.

இதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை இபுலீஸை விடவும் அறிவில் குறைந்தவர்கள் என்று சொல்கிறார். இதைக்கொண்டு அம்பேட்டியை மக்கா மதீனாவின் சங்கைக்குரிய உலமாக்கள் ''காபிர்'' என்று பத்வா கொடுத்தார்கள்.

4. அஷ்ரப் அலி தானவி தனது “ஹிப்ளுல் ஈமான்” என்னும் நூல் 6-ம் பக்கத்தில் “ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அறிவைப் போன்று சாதரண மனிதர்களுக்கும், சிறு குழந்தைகளுக்கும், பைத்தியக்காரர்களுக்கும் தான் இருக்கிறது என்று மிக மட்டமாக எழுதினார். ரஸூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அறிவை பைத்தியக்காரர்களுக்கு சமமாக்கி கடுமையாகச் சாடி எழுதினார்.

இதனால் சங்கை மிகு மக்கா, மதீனாவின் உலமாக்கள் தானவியையும் “காபிர்” என்று மார்க்க தீர்ப்பு வழங்கினர்.

மேலே கூறி வந்த நானூத்தவி, கங்கோஹி, அம்பேட்டி, தானவி, இந்நால்வரும் மேலும் மிர்ஜாகுலாம் காதியானியும் ஆக 5 பேர்கள் பேரிலும் பரேலி அஃலா ஹழ்ரத் அஹ்மது ரிழாகான் ரஹிமஹுல்லாஹ் அவர்கள், இவர்கள் காபிர் என ஒரு பத்வா “அல்முஃதமதுல் முஸ்தனது” என்ற பெயரில் எழுதி மக்கா மதீனாவின் உலமாக்களிடமும் ஒப்பம் வாங்கி மொத்தம் 34 உலமாக்களுடைய கையொப்பத்துடன் “ஹூஸாமுல்ஹறமைன்”என்ற பெயரில் ஹிஜ்ரி 1324-ல் வெளியிட்டார்கள்.

கலீல் அஹ்மது அம்பேட்டி ஹிஜ்ரி 1325-ல் “அல் முஹன்னது அலல்முபன்னது” என்ற பெயரில் ஒரு பத்வா வெளியிட்டார். அந்த பத்வாவின் முகவுரையில் 4-ம் பக்கத்தில் உருது மொழியில்,

ஹிஜ்ரி 1324-ல் வெளிவந்த “ஹூஸாமுல் ஹறமைன்” என்ற பத்வாவை பற்றி, இந்த பத்வா தேவுபந்து உலமாக்கள் பேரில் பரேலி அஹ்மது ரிழாகான் (தப்பு பிரச்சாரம் செய்து குப்ரு பத்வா வாங்கி) அநியாய வேலை செய்திருப்பதாக மதீனா உலமாக்களிலொருவர் தெரிந்து தேவுபந்து உலமாக்களிடத்தில் 26 கேள்விகளைக் கேட்டனுப்பி, அக்கேள்விகளுக்கு தங்கள் கொள்கைகளை விளக்கி எழுதும்படி கேட்டிருந்தார்கள். அதன்படி மௌலவி கலீல் அஹமது அவர்கள் பதில் எழுதி மக்கா மதீனாவின் உலமாக்களுக்கு அனுப்பி வைத்தார்கள். மக்கா மதீனாவின் உலமாக்களும், மிஸ்ரு, ஹலபு,

ஷாம், திமஷ்கிலுள்ள உலமாக்களும் அதனை சரிக்கண்டு நற்சாட்சி பத்திரங்கள் எழுதி, இந்தக் கொள்கைகள் சரியானவை இந்தக் கொள்கையின்படி யாரும் காபிராகவோ, பித்அத்துக்காரனாகவோ மாட்டான். மேலும் “சுன்னத்ஜமாத் கூட்டத்தை விட்டு அப்புறப்படமாட்டான்” என்று எழுதியிருக்கிறார்கள். இவ்வாறு அந்த பத்வாவின் முகவுரையில் அப்படி சொல்கிறார்.

“ஹுஸாமுல் ஹறமைன்” பத்வா மூலமாக தேவுபந்து ஆலிம்களை காபிர்கள் என பத்வா கொடுத்த மக்கா, மதீனா உலமாக்கள் பொய்ப்பிரச்சாரத்தை நம்பி தவறுதலாக பத்வா கொடுத்தனர். ஆனால் பின்னர் உண்மையைத் தெரிந்து தங்களின் முதல் பத்வாவுக்கு மறுப்பாக தேவுபந்தியர்கள் உண்மை முஸ்லிம்கள் என்று மற்றொரு பத்வா கொடுத்தனர் என்பது அம்பேட்டியின் வாதம்.

இவரது இந்த வாதத்தில் உண்மை எவ்வளவு தூரம் கலந்திருக்கிறது என்பதை கீழே காண்போம்.

அம்பேட்டியின் வாதம் உண்மையானது என்றிருக்குமானால்-

1 தேவுபந்தியர்களைக் காபிர்கள் என்று கூறும் ஹுஸாமுல் ஹறமைன் பத்வாவில் யார் யார் கையெழுத்திட்டிருக்கிறார்களோ, அவர்களெல்லாமே, தேவுபந்தியர்கள் உண்மையாளர்கள் காபிர்களில்லை என்று கூறும் அல்முஹன்னது பத்வாவிலும் கையெழுத்திட்டிருக்க வேண்டும்.

2 “ஹுஸாமுல் ஹறமைன்” பத்வாவில் எந்த எந்த வாசகங்களைச் சுட்டிக் காட்டி தேவுபந்தியர்கள் காபிர்கள் என்று கூறப்பட்டதோ, அந்த வாசகங்களை அல்முஹன்னதிலும் எடுத்தாண்டு அவை குப்ரியத்தை விளைவிப்பன அல்ல. இவ்வாசகங்களில் குப்ரியத்து இல்லை என்று எழுதப்பட்டிருக்கவேண்டும்.

3 தேவ்பந்த் உலமாக்களின் எந்த வாசகங்களைப் பொறுத்து அவர்கள் காபிர்கள் என்று ஹுஸாமுல் ஹறமைனி பத்வாவில் கூறப்பட்டதோ, அவ்வாசகங்களின் சரியான கருத்தை விளங்கி கொள்வதில் தாங்கள் தவறி விட்டதாகவும், அவ்வாசகங்களுக்குக்

தவறான கருத்துக் கொண்டு அதன் பேரில் தான் தேவ்பந்த் உலமாக்களை காபிர்கள் என்று பத்வா கொடுத்து விட்டோம். அந்த பத்வா செல்லுபடியாகாது. அதன்படி அமல் செய்யக்கூடாது என்று அல்முஹன்னதில் எழுதியிருக்க வேண்டும்.

4 தேவ்பந்த் உலமாக்கள் காபிர்களல்ல என்று பத்வா கொடுக்கப்பட்டிருக்கும் அல்முஹன்னதில் அப்படி பத்வா கொடுத்த உலமாக்களின் கையொப்பத்தோடு அவர்கள் கொடுத்த பத்வாவை அப்படியே கூட்டாமல் குறைக்காமல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட நான்கு அம்சங்களும் பூரணமாக இருந்தால் அல்முஹன்னதை நம்ப முடியும். உண்மை என்று ஏற்றுக்கொள்ள முடியும். இதில் ஒரு அம்சமாவது இல்லையாயின், அதை எப்படி உண்மையானது என்று ஏற்றுக்கொள்ள முடியும்?

இப்போது ஹுஸாமுல் ஹறமைன் பத்வாவில் கையொப்பமிட்டவர்கள் யார் யாரெல்லாம் அல்முஹன்னதிலும் கையெழுத்திட்டு இருக்கிறார்கள் என்பதைக் காண்போம்:-

**ஹுஸாமுல் ஹறமைனியில் ஒப்பமிட்டவர்கள் மக்கா உலமாக்கள்:**

1 அஷ்ஷெய்கு முஹம்மது பாபஸீல் முப்தி ஷாபிஇய்யா மக்கத்துல் முகர்ரமா
2 அஷ்ஷெய்கு அஹம்மது மீற்தாது ஷைகுல் குத்பா மக்கா
3 அஷ்ஷெய்கு முஹம்மது ஸாலிஹ் பின்ஸித்தீக் கமால் முப்தியுல் ஹனபிய்யா மக்கா
4 அஷ்ஷெய்கு அலி பின் ஸித்தீக் கமால் மக்கா
5 அஷ்ஷெய்கு முஹம்மது அப்துல்ஹக் முஜாஹிர் அலகாபாதி
6 அஷ்ஷெய்கு இஸ்மாயீல் பின் அஸ்ஸெய்யிது கலீல் மக்கா
7 அஷ்ஷெய்கு முஹம்மது மற்ஸூகி அபூஹுஸைன் மக்கி
8 அஷ்ஷெய்கு உமறுபின் அபீபக்று பாஜுனைது மக்கி
9 அஷ்ஷெய்கு ஆபிது பின் ஹுஸைன் முப்தியுல் மாலிகிய்யா மக்கா
10 அஷ்ஷெய்கு முஹம்மது அலிபின் ஹுஸைன் மாலிகி மக்கா
11 அஷ்ஷெய்கு முஹம்மது ஜமால் முஹம்மதுபின் ஹுஸைன்
12 அஷ்ஷெய்கு அஸ்அது பின்அஹ்மது அத்தஹான் முதர்ரிஸ்ஷரீப் மக்கா
13 அஷ்ஷெய்கு அப்துர்ரஹ்மான் அத்தஹான் மக்கா

14 அஷ்ஷெய்கு முஹம்மது யூசுபுல் ஆப்கானி முதர்ரிஸ் மதரஸத்துல் ஸௌதிய்யா மக்கா
15 அஷ்ஷெய்கு மக்கிபின் ஷைகு லியாவுத்தீன் முதர்ரிஸ் ஹரமில் மக்கி
16 அஷ்ஷெய்கு முஹம்மது பின் யூஸு ப
17 அஷ்ஷெய்கு முஹம்மது ஸாலிஹ் பின் பாபல்லு மக்கா
18 அஷ்ஷெய்கு அப்துல் கரீம் அன்னாஜி அத்தாகிஸ்தானி
19 அஷ்ஷெய்கு முஹம்மது ஸஈது பின் முஹம்மது அல்யமானி
20 ஹாமிதுஅஹ்மது முஹம்மது அல்ஜதாவி

## மதீனா உலமாக்கள்

21 மவுலானா முஹம்மது தாஜு த்தீன் பின்முஸ்தபா இல்யாஸ் முப்தில் ஹனபிய்யா, மதீனா
22 மவுலானா உதுமான் அப்துஸ்ஸலாம் அத்தாஹ்ஸ்தானி மாஜி முப்தில் மதீனத்தில் முனவ்வரா
23 அஸ்ஸெய்யிது அஹ்மதுல் ஜஸாயிரி அல்மதனி
24 மவுலானா அஷ்ஷெய்கு கலீல்பின் இபுறாஹீமில் கர்பூதி மதினா
25 அஸ்ஸெய்யிது முஹம்மது ஸஈது ஷைகுத்தலாயில் மதீனா
26 மவுலானா முஹம்மது பின் அஹ்மது அல் உமரீ மதீனா
27 மவுலானா அஸ்ஸெய்யிது அப்பாஸ் பின் அஸ்ஸெய்யிது முஹம்மது ரிள்வான் ஷைகுத்தலாயில்
28 மவுலானா உமறுபின் ஹம்தான் அல்மஹ்நூஸி
29 மவுலானா (இவரே திரும்பவும்)
30 அஸ்ஸெய்யிது முஹம்மதுபின் முஹம்மது அல்மதனி அல்தீதாறி
31 அஷ்ஷெய்கு முஹம்மதுபின் முஹம்மது அஸ்ஸூ ஸி அல்கியாரி முத்ரிஸ்ஹரமிஷ்ஷரீப்
32 அஸ்ஸெய்யிது அஹ்மதுல் பாஜ்ஞ்சி முப்திஷ் ஷாபி இய்யா மதீனா
33 அஷ்ஷெய்கு முஹம்மது அல்அஜீஸ் அல் மாலிகி அல்மதனீ
34 அஷ்ஷெய்கு அப்துல் காதிர் தௌபீக் ஷிப்லி ஹனபி முதர்ரிஸ் மஸ்ஜிதுன்னபவீ மதீனா

**அல்முஹன்னதில் கையொப்பமிட்டவர்கள் முதலாவதாக தேவ்பந்த் ஆலிம்கள் 24 பேர்களின் கெயொப்பம் குறிப்பிடப்படடுள்ளது அவர்கள்:**

1 மஹ்மூது ஹஸன் தேவ்பந்தி
2 மீர் அஹ்மது ஹஸன் அம்றூஸி
3 அஜீஸு ர் ரஹ்மான் தேவ்பந்தி
4 அஷ்ரப் அலி தானவி

5 முஹம்மது ஹஸன் தேவ்பந்தி
6 அப்துர் ரஹீம் ராய்பூரி
7 குத்ரதுல்லாஹ் முறாதாபாதி
8 ஹபீபுர் ரஹ்மான் தேவ்பந்தி
9 முஹம்மது அஹ்மதுபின் முஹம்மது காஸிம்
10 குலாம் ரஸூ ல் தேவ்பந்தி
11 ஸஹூ ல் தேவ்பந்தி
12 அப்துஸ்ஸமது பிஜ்நூரி முதர்ரிஸ் தேவ்பந்தி
13 முஹம்மது இஸ்ஹாக் நட்டூரி
14 ரியாஜூ த்தீன் மீரட்டி
15 கிபாயத்துல்லாஹ் ஷாஹ்ஜஹான் பூரிமுதர்ரிஸ் அமீனிய்யா
16 ழியாவுல்ஹக்கு அமீனிய்யா திஹ்லி
17 முஹம்மது காசிம் முதர்ரிஸ் அமீனிய்யா திஹ்லி
18 ஆஷிகே இலாஹி மீரட்டி
19 ஸிராஜ் அஹ்மது
20 முஹம்மது இஸ்ஹாகு மீரட்டி
21 ஹகீம் முஸ்தபா பிஜ்நூரி
22 மஸ்ஊது அஹ்மது கொங்கோகி பின் ரஷீது அஹ்மது கொங்கோகி
23 முஹம்மது எஹ்யா ஸஹ்ஸறாமி முதர்ரிஸ் மதரஸா மஸாஹிருல் உலூம், ஸஹாரன்பூர்.
24 கிபாயத்துல்லாஹ் முதர்ரிஸ் மத்ரஸா மஸாஹிருல் உலூம்.

**மக்கா உலமாக்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டவர்கள்:-**

1 அஷ்ஷெய்கு முஹம்மது ஸயீதுபாபஸீல் முப்திஷ் ஷாபிய்யா
2 அஷ்ஷெய்கு அஹ்மது ரஷீது கான் நவாபு மக்கி
3 முஹிப்புத்தீன் முஹாஜிர் மக்கா
4 அஷ்ஷெய்கு முஹம்மது ஸித்தீக் ஆப்கானி
5 அஷ்ஷெய்கு முஹம்மது ஆபிதுபின் ஹீஸைன் முப்தி மாலிகிய்யா
6 மவுலா முஹம்மது அலிபின் ஹு ஸைன் மாலிக் (ஷைகு முஹம்மது ஆபிது அவர்களின் சகோதரர்)

**மதீனா உலமாக்கள் என்ற பெயர் குறிப்பிடப்பட்டவர்கள்**

(1) மவுலானா ஸெய்யிது அஹ்மது பர்ஜஞ்சி முப்திஷ் ஷாபியிய்யா (இவர்கள் தங்களின் “கமாலுத்ததுகீபு'' எனும்ரிஸாலாவில் எழுதியிருப்பதாக எழுதி அவர்களின் ஒப்பத்தையும் அல்முஹன்னதில் எழுதியிருக்கிறார். மேலும் ' “கமாலுத்ததுகீபு'' எனும் ரிஸாலாவில்

காணப்படும் 24 பேர்களின் ஒப்பங்களையும் அல்முஹன்னதில் குறிப்பிடப்பட்டுள்ளது) (2) ரஸூ ஹி உமறு (3) முல்லா முஹம்மது கான் (4) கலீல் பின் இப்ராஹீம் (5) முஹம்மது அஜீஸ் அல் வஜிறு தூனுஸி (6) செய்யிது அஹ்மது அஜாயிரி (7) உமறுபின் ஹம்தானுல் மஹறூஸி (8) முஹம்மது ஜகிய்யில் பர்ஜஞ்சி (9) முஹம்மது ஸ ூ ஸிய்யுல் கியாரி (10) அஹ்மது பின் மாமூனுல் பல்கீஸ் (11) முஹம்மது தௌபீக்ள (12) மூஸா காழிப் பின் முஹம்மது (13) செய்யிது அஹ்மது ம்ஃஸூ ம் (14) அஹ்மது பின் முஹம்மதுல் கைறுல் ஹாஜ்ஜூ ல் அப்பாஸி (15) அப்துல்லாஹில் காதிர்பின் முஹம்மது பின் ஸவுதா் (16) முஹம்மது மன்ஸூ ர்பின் நுஃமான் (17) முல்லா அப்துற்றஹ்மான் (18) யாசீன் (19) மஹ்மூது அப்துல் ஜவாது (20) அஹ்மதுபஸாதி (21) முஹம்மது ஹஸன் ஸந்தி (22) அஹ்மதுபின் அஹ்மதுஅஸ் அது (23) அப்துல்லாஹ் (24) முஹம்மது பின் உமருல்புலானி (25) அஹ்மது பின் முஹம்மதுஹ்ஷன்கீனி

**எகிப்தின் ஜாமிஉல் அஸ்ஹர் உலமாக்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டவர்கள்:-**

(1) ஷமீமுல் புஷ்றா (2) முஹம்மது இப்றாஹீமுல் கயாதி (3) ஸு லைமானுல் அப்து

**திமிஷ்கின் உலமாக்கள் என்ற பெயர் குறிப்பிடப்பட்டவர்கள்:-**

(1) முஹம்மது ஆபிதின் பின் அஹ்மது (2) ஷைகுமுஸ்தபா பின் அஹ்மதுஷ் ஷதீ (3) ஷைகு மஹ்மூது ரஷீதுல் அத்கா் (4) ஷைகு முஹம்மதுல் பூஷி (5) முஹம்மது ஸாஈதுல் ஹமவி (6)ஷைகு அலி இப்னு முஹம்மதுத்தல்லால் (7) முஹம்மது அதீபு (8) ஷைகு அப்துல்காதிர் லுபாபீதி (9) ஷைகு முஹம்மது ஸாஈது (10) முஹம்மது ஸாஈது லுதுபி (11) பாரிஸு பின் முஹம்மது (12) ஷைகு முஸ்தபல் ஹத்தாது

அல்முஹன்னதின் 4-ம் பக்கம் 11-வது வரியில், மக்கா மதீனா உலமாக்கள் தவறான தகவலின் பேரில் தேவ்பந்தி உலமாக்களை காபிர்கள் என்று பத்வா கொடுத்ததாகவும், பின்னர் உண்மையை விளங்க நாடிய அவர்கள் தேவ்பந்தி உலமாக்களுக்கு 26 கேள்விகளை

கேட்டு அனுப்ப, தேவ்பந்த் உலமாக்கள் சுன்னத் ஜமாத் கொள்கைப்படி விளக்கமான பதில் எழுதியதன் பேரில் மக்கா, மதீனா உலமாக்கள், தேவ்பந்த் உலமாக்களை காபிர்களில்லை என்று பத்வா கொடுத்ததாக எழுதப்பட்டிருக்கிறது.

தேவ்பந்த் உலமாக்களிடம் வினா எழுதி பதில் கேட்டது யார்? என்ற விபரம் காணப்படவில்லை அப்படி வினா விடுத்தவர் (மக்கா மதீனா உலமாக்களின் பத்வா வான) ஹுஸாமுல் ஹரமைனியில் கையொப்பமிட்டவரா? அல்லது வேறு நபரா? என்பதும் விளங்கவில்லை.

அல்முஹன்னதின் 7-ம் பக்கத்தில் "உலமாக்களே! சிலர் உங்களை வஹ்ஹாபிக் கொள்கையுடையவர்கள் என்றும் வஹ்ஹாபிக் கொள்கைகளை எழுதியிருப்பதாக சில நூற்களையும், தாள்களையும் எங்களிடம் கொண்டு வந்து காட்டினார்கள் (அது எங்களுக்குத் தெரியாத) வேறு பாஷையில் இருப்பதனால் எங்களுக்கு அது விளங்கவில்லை. ஆகையால் அதன் கருத்தையும் உண்மை நிலையையும் விளக்கி வைப்பீர்கள் என்ற நம்பிக்கையில் வஹ்ஹாபிகளுக்கும் சுன்னத்வல் ஜமாஅத்துகளுக்குமிடையில் விதற்பமான சில கருமங்களைப் பற்றி உங்களிடம் கேட்கிறோம் என்று எழுதியுள்ளதை பார்க்கும் போது கேள்வி கேட்டவர் ஹுஸாமுல் ஹறமைனியில் ஒப்பமிடாத வேறொருவர் என்று எண்ண முடியவில்லை.

"தேவ்பந்த் உலமாக்கள் காபிர்கள்" என்று பத்வா கொடுக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த, அவர்களால் எழுதப்பட்ட வாசகங்களை (1) நாங்கள் எழுதவில்லை, நாங்கள் எழுதியிருப்பதாக எங்கள் பேரில் பொய்யாகச் சொல்லப்பட்டிருக்கிறது, இட்டுக்கட்டப் பட்டிருக்கிறது (2) அல்லது அந்த வாசகங்களுக்கு நீங்கள் விளங்கியிருப்பது போன்ற குப்ரிய்யத்தான கருத்து அல்ல அவைகளின் கருத்து இதுதான் என்று நேரான ஒரு விளக்கத்தைக் காட்டியோ தான் தங்கள் மீது காபிர் என்று கொடுக்கப்பட்ட பத்வா சரியல்ல தவறானது என வாதாடலாமே தவிர நாங்கள் வஹ்ஹாபிக் கொள்கைகளை வெறுக்கிறோம், அதை மறுக்கிறோம், நாங்கள் சுன்னத் ஜமாத் கொள்கையைத்தான் ஆதரிக்கிறோம் என்று கூறுவதைக் கொண்டு அவர்கள் பேரில் கொடுக்கப்பட்ட பத்வா சரியில்லை என்று வாதாட முடியாது.

ஆகவே தேவ்பந்த் உலமாக்களிடத்தில் வினாக்களை கேட்டவர் ஹுஸாமுல் ஹறமைனியில் கையொப்பமிட்டவர் தான் என்று வைக்க வேண்டும். அப்படியே வைத்துக் கொண்டாலும் தேவ்பந்த் உலமாக்கள் எழுதிய வாசகங்களைப் பொறுத்து அவர்களைக் காபிர்களென்று பத்வா கொடுத்த பின்னரா அவர்கள் எழுதிய வாசகங்களைப் பற்றி விளக்கம் கேட்டார்கள் ?

ஒரு முஸ்லிமை “காபிர்” என்று பத்வா கொடுப்பது லேசான காரியமல்ல! மரணத்தண்டனை அளிப்பதை விட இத்தீர்ப்பு மிக்க கடுமையானதாகும்.

மேலும் ஒரு முஸ்லிமிடமிருந்து எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாத வகையில் குப்ரியத்தான செயலோ, வார்த்தைகளோ, எழுத்தோ ஏற்பட்டதாக ருஜு வாகாமல் அவனை காபிர் என்று சொல்பவன் காபிராகி விடுகிறான். இப்படி இருக்க மக்கா மதீனா உலமாப்பெருமக்கள் காரணமின்றி ஒரு முஸ்லிமை காபிர் என்று சொல்வார்களா? ஒரு போதும் அப்படி சொல்லமாட்டார்கள். தேவ்பந்த் உலமாக்கள் எழுதிய வாசகங்களுக்கு, எவ்விதத்திலும் நல்ல கருத்து வைக்க இடமில்லாது குப்ரிய்யித்தான கருத்துக்களின் பேரிலேயே தெளிவாக அறிவித்ததனால்தான் ஹுஸாமுல் ஹறமைனியிலும் அந்த வாசகங்களை எழுதிக் காட்டியே தான் அந்த வாசகங்களை எழுதிய தேவுபந்திகள் காபிர்கள் என்று மக்கா மதீனா உலமாக்கள் தீர்ப்புக்கொடுத்தனர். எனவே இந்த அல்முஹன்னது முற்ற முழுக்க பொய்யுரைகளும், புனைந்துரைகளும் நிறைந்தவை என்பது அப்பட்டமாகுகிறது.

(3) அல்முஹன்னதின் 45-ம் பக்கம் 13 ம் வரியில், உருதுவில் இந்த அரபி ரிஸாலாவுக்கு இந்திய உலமாக்களின் நற்சாட்சி பத்திரங்களை எல்லாம் பூரணமாக எழுதி வாங்கப்பட்டதின் பின்னரே ஹிஜாஸ், மிஸ்ரு, ஷாம் தேசங்களுக்கு அனுப்பப்பட்டதினால் ஆரம்பத்தில் இந்திய உலமாக்களின் மதிப்புரைகளை எழுதப்பட்டிருக்கிறது என எழுதி 24 தேவ்பந்திகளின் கையொப்பங்கள் குறிக்கப்பட்டுள்ளது. மற்ற சுன்னத் ஜமா அத்உலமாக்கள் ஒருவரிடமும் கூட கையெழுத்து வாங்கப்படவில்லை.

தங்களை காபிர்கள் என்று சொன்னவர்களிடமல்லவா முதலில் நற்சாட்சிப்பத்திரம் வாங்க வேண்டும். தங்களிடம் சந்தேக நிவர்த்திக்காக வினாக்களை கேட்டவர்களிடமல்லவா முதலில் கையொப்பம் பெற வேண்டும்?

ஏனைய சுன்னத் ஜமா அத் உலமாக்களிடமல்லவா தாங்கள் காபிர்களில்லை முஸ்லிம்கள் தான் என்று எழுதி கையொப்பம் வாங்க வேண்டும்.

ஆனால் இது ஒன்றும் அல்முஹன்னதில் இல்லை. எனவே அல்முஹன்னது முழு கற்பனை என்பது வெளிச்சமாகிறது.

அல்முஹன்னதின் 45-ம் பக்கத்தில் "அல்முஹன்னது" என்ற நூல் ஹிஜ்ரி 1325 ஷவ்வால் 18-ல் எழுதப்பட்டது என எழுதியிருக்கிறார். அல்முஹன்னதின் 57-ம் பக்கத்தில் அஹ்மது ரஷீது கான் நவாபு மக்கி என்பவரின் நற்சாட்சியில் அவர் இது ஹிஜ்ரி 1329 துல்ஹஜ் 18-ல் எழுதியதாக குறிப்பிடுகிறார்.

எனவே அல்முஹன்னது எழுதப்பட்டு மூன்றாண்டுகளுக்குப் பின்னர் தான் மக்கா போனதாகத் தெரிகிறது. இத்தனை வருடங்கள் சுணங்கியது ஏன்? சுந்தேக நிவர்த்திக்காக கேள்வி கேட்டு எழுதினால் அதற்குரிய விடை எழுதி மூன்று வருடங்கள் கழித்தப்பின்னரா அனுப்பிவைப்பது?

அல்முஹன்னதின் 66-ம் பக்கத்தில், முப்தி செய்யிது அஹ்மது பர்சஞ்சி அவர்களுடைய ரிஸாலா கமாலுத்தக்கீபிலிருந்து நற்சாட்சிகளை எடுத்தெழுதியுள்ளனர். ஆனால் அவர்கள் அந்தரிஸாலாவை ஹிஜ்ரி 1329 ரபீஉல் அவ்வல் 2-ல எழுதி முடித்தாக காட்டியிருக்கிறார்கள். எனவே அல்முஹன்னது எழுதப்பட்டு 4 ஆண்டுகளுக்குப் பின்னரே சென்றாதாகத் தெரிகிறது.

இவைகள் அல்முஹன்னதின் புளுகும் தன்மைகளை வெளிச்சமாக்கிக் காட்டுபவைகளாகும்.

அல்முஹன்னதின் 56-ம் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் இவை மக்கா உலமாக்களின் நற்சாட்சிப்பத்திரங்களின் சாராம்சம் என்று எழுதி 25 பேர்களுடைய நற்சாட்சிப்பத்திரங்களையும்,

62-ம் பக்கத்தில் இவை மதீனா உலமாக்களின் நற்சாட்சிப் பத்திரங்களின் சாராம்சம் என்று எழுதி 25 பேர்களுடைய நற்சாட்சிப் பத்திரங்களையும் 3 பேர்களது நற்சாட்சிகளையும்,

70-ம் பக்கத்தில் இவை மிஸ்ரு உலமாக்கள், ஜாமி உல் அஸ்கர் உலமாக்களின் நற்சாட்சிப்பத்திரங்களின் சாராம்சம் என்று எழுதி 3 பேர்களது நற்சாட்சிகளையும் ,

71-ம் பக்கத்தில் இவை திமிஷ்கு உலமாக்களின் நற்சாட்சிப் பத்திரங்களின் சாராம்சம் என்று எழுதி 10 பேர்களது நற்சாட்சிப் பத்திரங்களையும் எழுதப்பட்டிருக்கிறது.

நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியவர்களுடைய ஒப்பத்தோடு எந்தக் கூட்டலும் குறைத்தாலும் இன்றி அப்படியே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

சாராம்சம் சொல்லும் போது ஒவ்வொருவருடைய கட்டுரை பேச்சு இவைகளிலிருந்து வேறொருவர், தான் விளங்கிய கருத்தைச் சுருக்கமாக தனது வாசகங்களைக் கொண்டு எழுதிக்காட்டுவதாகும். எனவே இவர் விளங்கிய கருத்தும், இவருடைய வாசகமும் கட்டுரை எழுதிய-வருடையதாக இருக்க முடியாது.

இவற்றை வைத்துப்பார்க்கும் போது அல்முஹன்னதின் உண்மை நிலையை சந்தேகத்திற்கிடமின்றி நாம் தெரிந்துக் கொள்ள முடியும்.

அல்முஹன்னதில் எழுதப்பட்டுள்ள 46 நற்சாட்சிப்பத்திரங்களில் ஒன்றில் கூட எழுதியிருப்பவரின் கையொப்பமோ, முத்திரையோ இல்லை. அல்முஹன்னது உண்மையாக இருந்தால் தானே இவற்றை காண முடியும்?

மக்கா உலமாக்களின் பட்டியலில், அஹ்மது ரசீது கான் நவாபு மக்கி என்பவரையும் குறிக்கப்பட்டுள்ளது. இவர் மக்காவாசியில்லை. ஏனென்றால் மக்காவாசிகள் கான், நவாபு என்று பெயர் வைப்பதில்லை. பட்டாணியர்கள் இப்படி பெயர் வைப்பது வழக்கம். ஆகவே இந்தப் பெயருடையவர் ஒரு அரபியல்லாதவராகவே இருக்கவேண்டும்.

எனவே இவருக்கு மக்கீ- மக்காவைச் சார்ந்தவர் என்று எழுதியிருப்பது முற்றிலும் பொய்யும், புனைந்துரையுமாகும்.

அல்முஹன்னது 60-ம் பக்கத்தில் முஹிப்புத்தீன் முஹாஜிர் மக்கா என்பவரது நற்சாட்சிப் பத்திரத்தின் சாராம்சம் தரப்பட்டுள்ளது. இவர் ஹு ஸாமுல்ஹரமைனியில் கையொப்பம் வைக்கவில்லை. மேலும் இவர் மக்காவாசியுமல்ல.

இப்படி எண்ணற்ற முரண்பாடுகளும், பொய்யுரைகளும் நிறைந்து காணப்படுகிறது அல்முஹன்னது.

அல்முஹன்னதின் 61-ம் பக்கத்தில் அல்லாமா ஷெய்கு முஹம்மது ஆபிது பின் ஹு ஸைன் முப்தி மாலிகி அவர்களும், அவர்களின் சகோதரர் அஷ்ஷெய்கு முஹம்மது ஆபிது பின் ஹு ஸைன் அவர்களும் எதிரிகளின் கலைப்பினால் தங்களது நற்சாட்சிப்பத்திரங்களைச் சுத்தமாக எழுதித் தருவதாக வாங்கிவிட்டு திருப்பித்தரவில்லை, நல்லவேளையாக அப்பத்திரங்களின் நகல்கள் இருந்தமையால் அதை இதில் எழுதி இருக்கிறோம் என்று எழுதப்பட்டுள்ளது.

இது எவ்வளவு மானமற்ற செயல்! அவர்களுக்கு விருப்பமில்லை என்பதால்தானே தந்திரமாக திரும்பி வாங்கிக் கொண்டார்கள். அவர்களுக்கு விருப்பமில்லாதிருக்கும் போது அவர்களின் கையொப்பத்தை வெளியிடலாமா?, எனவே இந்த ஒப்பங்கள் செல்லதக்கல்ல!

இந்த இரண்டு கையெழுத்தும், முன் விளக்கி வந்த மூன்று கையெழுத்தும், ஆக ஐந்தும் போக, அல்லாமா மஹம்மது ஸயீது பாபஸீல் அவர்களது நற்சாட்சிப் பத்திரம் ஒன்று மட்டுமே மிஞ்சுகிறது. அது கூட முழுமையாக இல்லை. சாராம்சம் என்றுதான் எழுதப்பட்டுள்ளது.

இவர்கள் ஹு ஸாமுல் ஹரமைனியில் ஒப்பம் வைத்தவர்கள் அல்முஹன்னதிலும் ஒப்பமிட்டது உண்மையானால், அவர்களால் வழங்கப்பட்ட நற்சாட்சிப்பத்திரத்தில் "நான் ஹு ஸாமுல் ஹரமைனியில் எந்த வாசகங்களை அடிப்படையாக வைத்து தேவ்பந்த் உலமாக்களை காபிர்கள் என்று பத்வா கொடுத்தேனோ அந்த வாசகங்களை

விளங்காமல் தவறாக புரிந்துக் கொண்டு அவர்களை காபிர்கள் என்று பத்வா கொடுத்தேன். இப்பொழுது ஊன்றிப் பார்த்தபோது அவற்றில் குப்ரிய்யத்தான கருத்துக்கள் இல்லை. ஆகையால் எனது முந்தைய பத்வா செல்லதக்கதல்ல. அதன்படி அமல் செய்தல் கூடாது'' என்று எழுதி இருக்க வேண்டும்.

ஆனால் அல்முஹன்னதில் இது எதுவுமில்லாததோடு அவர்களது நற்சாட்சிப் பத்திரத்தின் சாரமே தரப்பட்டுள்ளது. ஆகவே இந்த கையெழுத்து கற்பனையானது, பொய்யானது என்பது ருசுவாகிறது.

ஆக மக்கா உலமாக்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டு தரப்பட்டுள்ள ஆறுபேர்களின் நற்சாட்சிப்பத்திரங்களும் கையெழுத்துக்களும் அப்பட்டமான அண்டப்புளுகு என்பது தெளிவு.

அடுத்து மதீனா முனவ்வராவின் உலமாக்களது நற்சாட்சிப் பத்திரங்களும், கையொப்பங்களின் உண்மை நிலையையும் ஆராய்வோம்.

அல்முஹன்னதின் 62-ம் பக்கத்தில் இவை மதீனா உலமாக்களின் நற்சாட்சிப் பத்திரங்களின் சாராம்சம் என்றெழுதி முதலாவதாக மவுலானா செய்யிது அஹ்மது பர்சன்ஜீஷாபிஈ ஹரம் மாஜிமுப்தி அவர்களின் "கமாலுத்ததுகீபு'' என்ற ரிஸாலாவின் சாராம்சத்தை மூன்று பகுதிகளிலிருந்து எழுதுகிறோம் என்று உர்துவில் எழுதகிறார்.

இதனால் மதீனா உலமாக்கள் கலீல் அஹ்மதுவின் **"பொய் பத்வா''** ஆன அல்முஹன்னதுக்கு யாரும் நற்சாட்சிப் பத்திரம் எழுதவில்லை, எழுத மறுத்து விட்டார்கள் என்றும், அதனால் கலீல் அஹ்மது, அல்லாமா பர்சன்ஜி அவர்களது கமாலுத்ததுகீபின் மூன்று இடங்களிலிருந்து வாசகங்களை கூட்டிக்குறைத்து, மாற்றித்திரித்து தனது அல்முஹன்னதில் எழுதிக்கொண்டாரெனத் தெரிகிறது.

அல்முஹன்னதின் 62-ம் பக்கத்தில் மௌலானா பர்சன்ஜி அவர்களது "கமாலுத்ததுகீபின்'' ஆரம்பத்தில் இப்படிச் சொல்லி இருக்கிறார்கள், என்று சில வாசகங்களையும்,

64-ம் பக்கத்தில் கமாலுத்ததுகீபின் நடுப்பகுதியில் இவற்றைச் சொல்லி இருக்கிறார்கள் என்று சிலவாசகங்களையும் எழுதிவிட்டு, கலீல் அஹ்மது நம்மிடம் கொண்டு வந்து கவனித்துப் பார்க்கும்படியாக தந்து 26 வினாக்களுக்குரிய விடை உள்ள ரிஸாலாவில் குப்ரையும்,பித்அத்தையும் விளைவிக்கும் வார்த்தைகள் எதுவுமில்லை என்று கூறி, கமாலுத்தீதுகீபை முடித்து இருக்கிறார்கள் என அல்முஹன்னதின் 65-ம் பக்கத்திலும் எழுதப்பட்டுள்ளது.

இந்த கமாலுத் ததுகீபு ஹிஜ்ரி 1329 ரபீஉல் அவ்வல் பிறை 2-ல் எழுதி முடிக்கப்பட்டதாகவும் அல்முஹன்னதில் காணக்கிடைக்கிறது. இந்த விவரங்களை எழுதும் போது கூட கலீல் அஹ்மது அசல் வாசகங்களை எழுதாமல் “கமாலுத்தீதுகீபின் சாராம்சம்” என்றே குறிப்பிட்டுக் கூறுகிறார்.

இதில் விந்தை என்னவென்றால், மௌலானா பர்சன்ஜி எழுதியதாக கூறும் கமாலுத்தீதுகீபு என்ற ரிஸாலாவை அல்முஹன்னதில் இணைக்காமலே “அல்முஹன்னதில் கையெழுத்திட்ட மதீனா உலமாக்கள்” என்று கூறி கமாலுத்தீதுகீபில் காணப்படும் உலமாக்களின் கையெழுத்துக்களை எடுத்துக்காட்டுகிறார் கலீல் !

அல்முஹன்னதின் 66-ம் பக்கத்தில் “அல்லாமா பர்சன்ஜி அவர்களுடைய ரிஸாலாவில் தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருந்த நற்சாட்சிப்பத்திரங்களை ஆரம்பம், நடுப்பகுதி, கடைசிப்பகுதிகளிலிருந்து எழுதிவிட்டு அதில் கையெழுத்திட்டுள்ள உலமாக்களையும் விபரிக்கப்பட்டுள்ளது என்று 23-நபர்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளது”

இந்த 23-பேர்களும், கமாலுத் தீதுகீபில் கையொப்பம் வைத்துவிட்டு அல்முஹன்னதில் கையெழுத்திடாதிருக்கும் போது இவர்கள் அல்முஹன்னதில் கையெழுத்திட்டார்கள் என்று எப்படி கூற முடியும்?

அல்முஹன்னதின் ஒவ்வொரு பகுதியுமே பொய்யில் பிறந்தவை என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு! அண்டப்புளுகுகள் நிறைந்தது அல்முஹன்னது என்பதற்கு மற்றுமொரு சான்றைப்பாருங்கள்! அதன் 45-ம் பக்கத்தில் 1325-ல் அல்முஹன்னது எழுதப்பட்டதாக காணப்படுகிறது.

ஆனால் கமாலுத்ததுகீபு 1329-ல் எழுதிமுடிக்கப்பட்டதாக அதே முஹன்னது 66-ம் பக்கத்தில் காணப்படுகிறது. 1329-ல் எழுதப்பட்ட ஒரு நூலின் சாராம்சத்தையும் 1325-ல் எழுதப்பட்ட நூலில் எப்படி தரமுடியும்? ஒரே புத்தகத்தில் இப்படி பக்கத்துக்குப் பக்கம் முரண்பாடுகளைக் காண முடிகிறது. இப்படி இருக்க இதை எற்றுக்கொள்ள முடியுமா?என்ன!

அல்முஹன்னதின் 4-ம் பக்கத்தில் பரேலி அஹ்மது ரிழாகான் தப்புப் பிரச்சாரம் செய்து ஹுஸாமுல்ஹரமைன் என்ற பத்வாவை வாங்கிக்கொண்டார் எனத் தெரிந்துக் கொண்ட மதீனாவாசியொருவர் தேவ்பந்த் உலமாக்களிடம் 26 வினாக்கள் அனுப்பி பதில் தரக்கேட்டதாகவும் கலீல் அஹ்மது அவற்றுக்கு பதில் எழுதி அனுப்பியதாகவும் உள்ளது.

ஆனால் 65-ம் பக்கத்தில் கமாலுத்ததுகீபின் கடைசியில் கலீல் அஹ்மது நம்மிடம் கொண்டு வந்து கவனித்துப் பார்க்கும்படி தந்த 26 வினாக்களுக்கு விடையாக உள்ள ரிஸாலாவில் குப்ரையும் பித்அத்தையும் விளைவிக்கும் வார்த்தைகள் எதையும் நாம் காணவில்லை என்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அல்முஹன்னதின் 4-ம் பக்கத்து விவரப்படிப் பார்த்தால் நாம் கேட்டிருந்த 26 வினாக்களின் விடை என்றல்லவா மதீனா உலமாக்கள் கூறியிருக்க வேண்டும்? ஆனால் கமாலுத்ததுகீபில் அப்படிச் சொல்லப்படவில்லையே! கலீல் அஹ்மது நம்மிடம் கவனித்துப் பார்க்கும்படி தந்த ரிஸாலா என்றல்லவா காணப்படுகிறது!

அப்படியே அவர்கள் தாம் கேள்விகள் கேட்டனர் என்று வைத்துக் கொண்டாலும் உடனேயே பதில் எழுதி, கேள்வி கேட்டவர்களிடம் கொடுத்திருக்கவேண்டும்! ஆனால் 4-வருடம் கழித்து பதில் தரப்பட்டுள்ளது ஏன்? மேலும் பதில்கள் அடங்கிய அல்முஹன்னதிலேயே மதீனா உலமாக்கள் நற்சாட்சிப்பத்திரங்களை எழுதி கொடுக்காமல் கமாலுத்ததுகீபு என்ற ஒரு ரிஸாலா எழுதி அதில் அல்முஹன்னதைப் பற்றி சிலாகித்து எழுதி அதை வெளியிட்ட பின்னர் இதிலுள்ள கையெழுத்துக்களை அல்முஹன்னதில் எடுத்தெழுதுமாறு மதீனா உலமாக்கள் கூறினார்களா?

அப்படி அனுமதி கொடுத்திருந்தால் அந்த அத்தாட்சி எங்கே! கமாலுத்ததுகீபின் முழுவிவரத்தையும் தராமல் சாராம்சம் என்று கூறக்காரணம் என்ன?

எனவே இவை அத்தனையும் கலீலின் கற்பனையில் உதித்த அண்டப்புளுகள் என்பது திண்ணம். அல்லாமா பர்சன்ஜி அவர்கள் கமாலுத்ததுகீபு என்று ஒரு நூல் எழுதியதாகவும், அதில் 23-பேர்கள் கையெழுத்திட்டதாகவும் கூறியுள்ளவை எல்லாம் கலீல் அஹ்மதுவின் கற்பனைகளாகும்.

“நிச்சயமாக அல்லாஹ்வின் சாபம் பொய்யர்கள் மீதாகும் என்ற குர்அன் கூறிக்கொண்டிருக்கிறது”

அல்முஹன்னதின் 67-ம் பக்கம் 11-ம் வரியில் ஹழ்ரத் ஜனாப் ஷெய்கு முஸ்தபா அஹ்மது கைறஷன்கீளி என்பார் எழுதியது. என்று அவர்களது நற்சாட்சிப்பத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள இவரது நற்சாட்சி ஒன்றுதான் சாராம்சம் என்றில்லாமல் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இவர் ஹுஸாமுல்ஹரமைனில் கையெழுத்து போட்டவரல்ல. ஆகவே இவரது நற்சாட்சிப்பத்திரம் செல்லத்தக்கது அல்ல.

மேலும் அல்முஹன்னதின் 72-ம் பக்கம் 18-ம் வரியில் ஷெய்கு முஸ்தபா அஹ்மது ஷதீ என்பவரின் நற்சாட்சி இதழின் சாராம்சத்தில் “வஹ்ஹாபிகளுக்கு மறுப்பான சில மஸ்அலாக்களைப் பொதிந்த இந்த ரிஸாலாவைக் கோர்வை செய்த கலீல் அஹ்மதுவும் அந்தப் பெரியார்களிலுள்ளவர்தான்” என்றும்,

73-ம் பக்கத்தில் 24-வது வரியில் ஷெய்கு முஹம்மது அத்தாற் அவர்களுடைய நற்சாட்சியில் “நான் இக்கோர்வையை கவனித்தேன்! இது வஹ்ஹாபி, பித்அத்காரர்களுக்கு மறுப்பாக எல்லா சிறிய, பெரிய விஷயங்களையும் பொதிந்திருக்கிறது” என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வாசகங்கள் கலீல் அஹ்மது ஏதோ வஹ்ஹாபிகளுக்கு மறுப்பாக ஒரு ரிஸாலா எழுதிக்காட்டியதன் பேரில்தான் அவர்கள் இருவரும் கைசாத்திட்டிருக்கினறனர். அல்முஹன்னதின் - ஹுஸாமுல் ஹரமைனியின் மறுப்பில் கையெழுத்திடவில்லை என்பதும் நன்கு தெரியவருகிறது. ஏனென்றால் அல்முஹன்னது வஹ்ஹாபிகளுடைய கொள்கைகளுக்கு மறுப்பாக எழுதப்பட்டதல்ல.

ஆகவே கலீல் அஹ்மது தன் கற்பனையால் இட்டுக்கட்டி எழுதியதே அல்முஹன்னது என்பது தெளிவாகிறது, மேலும் அல்முஹன்னதில் மக்கா, மதீனா, திமிஷ்கு உலமாக்களில் ஒருவருடைய நற்சாட்சி பத்திரமுமில்லை எல்லாம் முழுக்கற்பனைகள், ஒருவேளை தேவ்பந்தியர்கள் மட்டும் அதில் கைச்சாத்திட்டிருக்கலாம்.

ஆனால் அதற்கு கூட வாய்ப்பில்லை. ஏனைன்றால் தேவ்பந்தியர்களின் நூற்களிலுள்ள வாசகர்களுக்கு-குப்ரான செய்திகளுக்கு மாற்றமாக அல்முஹன்னதில் காணப்படுகின்றது. அவர்களுக்கு குப்ரியத்தான அவ்வாசகங்கள் இன்றுவரை அச்சாகி வந்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அவைகள் (அவ்வாசகங்கள்) எங்களால் எழுதப்பட்டது அல்ல என்று அவர்களில் யாரும் மறுப்புக்கூட சொல்லவில்லை.

மேலும் எந்த நூலை வைத்திருப்பதும், பார்ப்பதும், படிப்பதும், அதன்படி நடப்பதும் ஐனுல்இஸ்லாம் (அதுவே இஸ்லாம்) என்று வர்ணிக்கப்படுகிற தக்வியத்துல் ஈமான், மற்றும் பதாவாரஷீதிய்யா, பறாஹீனேகாதிஆ, ஹிப்ளுல் ஈமான் மற்றும் தஹ்தீறுன்னாஸ் அனைத்துக்கும் மாற்றமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறது அல்முஹன்னது! இப்படி இருக்கும் போது, தன் குருநாதர்களையே மறுத்து எப்படி தேவ்பந்தியர்கள் கையொப்பமிட முன்வருவார்?

இவற்றையெல்லாம் நேர்மையாக சிந்தித்துப்பார்க்கும்போது அல்முஹன்னது, பொய்யில் பிறந்தது கற்பனையில் அவதாரம் எடுத்தது என்பது தெளிவுறத் தெரியவருகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் பொய்யர்களை விட்டு நம்மைக் காப்பாற்றி அவனது அருட்கடாட்சத்தில் நம்மை சுகிக்கச் செய்வானாக!

*(முதல்பாகம் முற்றுப்பெற்றது)*